அமைக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, துணைத் தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்த மாதிரிக் கேள்விகள்--முடிந்துபோன கேள்விகளுக்குரிய பதில்களைச் சொல்வதையே மரபாகக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. பல கோரிக்கைகள், நிறைவேறாமல் இருக்கிற கோரிக்கைகள் அடங்கிய அந்தக் கேள்விகளை எடுத்துக்கொள்வது என்பது உசிதமாக இருக்கும். முடிந்த கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லி திருப்திபடுவது என்பது எந்த வகையில் சரியாக இருக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 145, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

145—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***23319—திரு. கு. அன்பழகன்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுட்டிகாலடிபட்டி, அவ்வையம்பட்டி, நரியூத்து, காமலாபுரம், சக்கையநாயக்கனூர், புதுசத்திரம், கோடாங்கிநாயக்கன்பட்டி உட்பட 20 கிராமங்களுக்குச் செயல்படுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஒன்றியத்தில், குடிநீர்த் தட்டுப்பாடு உள்ள எரிலோடு, பிள்ளையார்நத்தம், கூவானூத்து, சிலுக்குவார்பட்டி, பள்ளப்பட்டி, பாளையகவுண்டன்பட்டி, நரியூத்து, கோட்டூர், கோடங்கிநாயக்கன்பட்டி, நூதலாபுரம், ஜம்பத்தூர்கோட்டை மற்றும் பச்சைமலையான்கோட்டை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 54 கிராமக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஆணை எண் 8, நாள் 21-2-2005-லே ரூபாய் 564.55

2005 மார்ச் 14]

இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவில் குறிப்பிட்டுள்ள அனைத்துக் குடியிருப்புகளும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன. இத்திட்டத்திற்கான ஒப்புந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஏப்ரல் 2005 இறுதியில் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணற்றிலே ஊர்ப் பெண்கள் எல்லாம் குழுமி, 300 அடி, 400 அடி என்ற அளவிலே கடைக்கால் போட்டு இறைத்த காலத்தை மாற்றி, ஊர்ப் புறம்போக்குப் பகுதியிலே அடிக்குழாய் அமைத்து, அங்கேயும் பெண்கள் சூழ்ந்துகொண்டு, தலையிலே ஒரு பானை, இடுப்பிலே ஒரு பானை, கையிலே ஒரு குடம் என்று சொல்லி தண்ணீர் எடுத்து வந்த காலத்தை மாற்றி, என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய அத்தனை ஊர்களுக்கும் Mineral water-க்கு நிகரான குடிதண்ணீரை, சுவையான தண்ணீரைக் கொடுத்த நம்முடைய தங்கத் தலைவி, ஒப்பற்ற தலைவி, உன்னதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வத்தலகுண்டு ஒன்றியத்திலே விருவீடு கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் நடகோட்டை, விராலிமயன்பட்டி, செருமார்பட்டி, அக்கரைப்பட்டி, தெப்பத்துபட்டி, கீழதெப்பத்துபட்டி, அச்சனம்பட்டி, கீழஅச்சனம்பட்டி, தருமத்துபட்டி, விராலிப்பட்டி, இராமநாயக்கன்பட்டி, வெங்கப்பநாயக்கன்பட்டி, எழுவனம்பட்டி, பழைய வத்தலக்குண்டு போன்ற கிராமங்களுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே அந்தத் திட்டம் அமையும் என்ற காரணத்தினால் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கடித நாள் 17-9-2003-ல் கோரியுள்ளபடி விருவீடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் கூடுதல் குடிநீர் வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களுடைய அனுமதி பெற்று, மேலே அவர் குறிப்பிட்ட அனைத்து கிராமங்களும்—விருவீடு, நடகோட்டை, விராலிமயன்பட்டி, சந்தையூர், செக்காபட்டி ஆகிய

5 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 29 குடியிருப்புகளுடைய பகுதிகளுக்கு அவர் கேட்டுள்ளபடி நீராதாரத்தைப் பெருக்கித் தருவதற்காக ஒரு விரிவான மதிப்பீடு ரூபாய் 240 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெறுவதற்காக அது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. கு. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே இப்படி ஒரு அற்புதமான ஆட்சியை--கேட்ட துறைகளுக்கு எல்லாம் வழங்கி, கேட்கப்படாத துறைகளுக்கும் வழங்கிக்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 146, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.*

146—

உடற்பயிற்சி மையம்

***43956—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் 1-வது பகுதியிலுள்ள உடற்பயிற்சி மையத்திற்கு உடற்பயிற்சி உபகரணங்களும், பாதுகாப்பு அறையும் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவரே, தலைவர் அவர்களே,...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எப்படி வேண்டுமானாலும் கூப்பிடுங்கள்.*

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: *(அ) இல்லை. (ஆ) நிலை எழவில்லை.*